[30th April 1959

திட்டங்கள் எப்பொழுது முடிவடையும்? எவ்வளவு ரூபாய்க்கு திட்டம் போடப் பட்டிருக்கிறது?

THE HON. SRI M. A. MANICKAVELU : பெரியாறு திட்டத்தில் இது ஒரு கட்டம். மற்ற கட்டங்கள் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக வரும்.

Export of handloom cloth

*** 299 *Q*.—SRI A. VEDARATHNAM :** கனம் தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்திலிருந்து வெளி நாடுகளுக்கு எவ்வளவு கைத் தறித்துணி எந்தெந்த நாடுகளுக்கு நடப்பு வருடத்தில் ஏற்றுமதியாகி இருக்கிறது?

(ஆ) இந்த ஏற்றுமதியை அதிகரிக்க என்ன முயற்சி எடுக்கப்பட்டிருக் கின்றது?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The answer [a] is printed and placed on the table of the House.

SRI A. VEDARATHNAM : வெளி நாடுகளுக்கு ஏற்று மதியாகிக் கொண்டிருந்த கைத்தறித் துணிகள் இங்கிலாந்த், கானடா போன்ற நாடுகளில் இப்பொழுது குறைந்திருக்கிறது. வேறு எந்த நாட்டுத் துணிகள் இதை ஸப்ஸ்ட்யூட் செய்திருக்கிறது? "பிஜி" போன்ற நாடு களில் இந்தியர்கள் ஏராளமாக இருக்கிறார்களே, அங்கு நமது கைத் தறித் துணிகளை அனுப்பினால் நல்லதல்லவா? அப்படி அங்கு அனுப்பு வதற்கு முயற்சி எதுவும் எடுத்திருப்பதாக இந்த ஸ்டேட்மெண்டில் காண வில்லையே! ஆகவே, அதற்கு வேண்டிய முயற்சிகள் எடுக்க சர்க்கார் முன் வருமா?

THE HON. SRI R. VENKATARAMAN : ஏற்றுமதியை அதிகரிப் பதற்காகத்தான் இப்பொழுது ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷனில் இருந்து ஒரு உப கமிட்டி போடப்பட்டிருக்கிறது. அதற்கு சென்னையில் ஆபீஸ்-ம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எந்தெந்த நாடுகளில் கைத்தறிக்கு அதிகம் கிராக்கி இருக்கிறதென்று நினைக்கிறோமோ அந்த நாடுகளுக்குத்தான் அனுப்ப முடியும். கனம் அங்கத்தினர் இங்கிலாந்து, கானடா போன்ற யிடங்களில் குறைந்திருக்கிறது என்று சொன்னார்கள். ட்ரெடிஷனல் மார் கெட் ஆகிய பர்மா, மலேயா போன்ற நாடுகளில் கூட முன்பு விற்றுக் கொண்டிருந்ததை விட இப்போது குறைவாக இருக்கிறது. அதைச் சமா ளிப்பதற்கும் கூடுதல் ஏற்றுமதி செய்யும் வழிவகைகள் பார்த்துக் கொண் டிருக்கிறார்கள்.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : வெளி மாகாணங் களுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய துணிகளுக்கு சேல்ஸ் எம்போரியம் சில சொஸைட்டிகளுக்கு ஆர்டர் கொடுத்து வாங்கி அவைகளுக்கு செலவு இல்லாமல் இருப்பதால் பல ஸொஸைட்டிகள் லட்சக்கணக்காக ரூபாய் பெறுமானமுள்ள துணிகளை தயாரித்து அவைகளை இன்று நடத்த முடியா மல் இருக்கக் கூடிய அளவிற்கு பல ஸொஸைட்டிகள் இருக்கின்றன, சேலத்தில். ஆகவே, அதை சேல்ஸ் எம்போரியம் மூலம் வாங்கி இந்த சொஸைட்டிகள் நடப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

MR. SPEAKER : கேள்வி, 'பாரின்' மார்க்கெட்டைப்பற்றியது. The question is out of order.

---

[a] Printed as Appendix XI on pages 812—814 infra.

30th April 1959]

SRI A. MARIAPPAN : பர்மா, சிலோன் போன்ற இடங்களில் கைத்தறித் துணிக்கு அதிகம் செலவு இருந்ததே ? அது குறையக் காரணமென்ன ? அதை அதிகப்படுத்துவதற்கு சர்க்கார் முயற்சி செய்யுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : எல்லா நாடுகளிலும் தேசிய மனப்பான்மை வளர்ந்து வருகிறது. எப்படி நாம் நம் நாட்டில் நமது பண்டங்களையே உபயோகிக்க வேண்டுமென்று சொல்கிறேமோ அதே போல் அந்தந்த நாடுகளில் சுதேசி மனப்பான்மை வளர்ந்து வருவதனுல் நமது துணி ஏற்றுமதி குறைந்து கொண்டேயிருக்கிறது. இருந்தாலும் பர்மா போன்ற இடங்களில் அதிகமாக அவர்கள் கைத்தறி உற்பத்தி செய்வதில்லை. மற்ற துணிகளைத்தான் அவர்கள் வாங்கிக் கொண்டிருக்கிறர்கள். ஆகவே, எந்த வகையில் அந்த சர்க்காருடன் நேரடிப் பேச்சு வார்த்தைமூலம் அல்லது வேறு எந்த வகையில் அதை அதிகரிக்க முடியும் என்பதை இப்பொழுது சொஸைட்டிகள் எல்லாம் ஆராய்ந்து கொண்டிருக்கின்றன.

SRIMATHI HEMALATHA DEVI : நமது மாகாணத்தில் எந்தெந்த ஜில்லாக்களிலிருந்து வெளி நாடுகளுக்கு கைத்தறித்துணி அனுப்பப்படுகிறது ? சேலம் ஜில்லாவிலிருந்து எவ்வளவு துணி வெளி நாடுகளுக்கு அனுப்பப்படுகிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : அதைக் கண்டு பிடிக்க முடியாது. சென்னை துறை முகத்தில் இருந்து எவ்வளவு ஏற்றுமதியாகிறது என்று தான் கணக்கு கொடுக்க முடியும்.

Plantation Labourers

*300 *Q*.—**SRI J. MATHA GOWDER** : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தோட்ட தொழிலாளர் வீடுகளுக்கு மின்சாரம் வசதி செய்து கொடுக்க தோட்ட முதலாளிகளுக்கு உத்தரவு பிறப்பிக்க சர்க்காருக்கு உத்தேசமுண்டா ?

(ஆ) ஆம் என்ருல் எப்பொழுது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The answer is in the negative.

SRI J. MATHA GOWDER : தோட்டங்களில் உள்ள தோட்ட உத்தியோகஸ்தர்களுக்கு மின்சார வசதி கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆனுல் தோட்டத் தொழிலாளர்களுக்கு மின்சார வசதி செய்து கொடுப்பதில் முதலாளிகளிடம் பணம் இல்லையென்ற காரணத்தினுல் அல்ல. ஆனுல் செய்யக்கூடாது என்ற மனப்பான்மை யிருப்பதால் உடனடியாக சர்க்கார் அவர்களுக்கு உத்தரவு பிறப்பித்து தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடுகளில் மின்சார வசதி அளிக்க உத்திரவிடுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : சர்க்கார் நினைத்த படியெல்லாம் உத்தரவு போடமுடியாது. ஆனுல், சர்க்கார், முக்கூட்டுக் கமிட்டிகளிலும், தொழிலாளர், முதலாளிகள் நேரடியாக பேச்சு வார்த்தை நடத்தும் போதும் இதைப் பற்றி வற்புறுத்தி ஆவன செய்வதற்கு தயாராக யிருக்கிறேம்.